சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச்செய்து. . ..

Praise the Lord: *கிறிஸ்துவே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்.*

## Let us Pray

ரோமர்/Romans 2:7 (பக்கம் 209)

சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச்செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்.

To those who by persistence in doing good seek glory, honor and immortality, he will give eternal life. (NIV)
To them who by patient continuance in well doing seek for glory and honour and immortality, eternal life: (KJV)

நற்கிரியைகள். . .. . .என்று சொன்னவுடனே தானதர்மம்தான் பலருக்கு உடனே சிந்திக்க தோன்றும். எதையும் எதிர்பார்க்காமல் ஒரு காரியத்தை செய்வது நல்ல கிரியை என்று பொதுவாக சொல்வார்கள். ஒருவருக்கு உணவு கொடுப்பதோ, ஒரு உதவியை செய்வதோ, நமது நேரத்தைப் பாராது ஒரு காரியத்திலே ஒருவருக்கு உதவுவது. . .இப்படி எவ்வளவோ இருக்கலாம்.

நான் பிறந்த ஊரிலே, நான் ஈடுபட்டிருந்த கோவிலிலே விஷேசமான நிகழ்ச்சியில் மிகமுக்கிய நிகழ்ச்சி ஊரிலே உள்ள ஏழைகளுக்கும் பிச்சைக்காரர்களுக்கும் உணவு கொடுப்பது.
எங்கள் ஊரிலே உள்ள இஸ்லாமிய தர்கா என்று சொல்லக்கூடிய Masqueல் நடக்கும் முக்கியமான நிகழ்ச்சியிலும்கூட ஏழைகளுக்கு உணவு கொடுப்பது மிகவும் பிரதானமாக இருக்கும்.
கோவிலுக்கு. . . . . போகும்போது கடவுளைப் பார்ப்பதற்கு முன்பு ஏழைகளையும் பிச்சைக்காரர்களையும் பார்க்கலாம்.

வீட்டிலே, வறுமையிலே இருக்கும்போது ஒரு பிச்சைக்காரன் வந்தால், அவனிடம் ஒன்றுமில்லை என்று சொல்லாமல், தேடி, இருக்கும் கொஞ்சத்தில் கொஞ்சம் கொடுப்பதை பார்த்திருக்கிறேன். . .

பக்கத்து கிராமத்திலிருந்து பல மைல்கள் நடந்து shopping வருகிறவர்களுக்கு, சரியான வெயில் நேரத்திலே, குளிர்ந்த தண்ணீரைக் கொடுத்து, வீட்டிலே கொஞ்சம் rest எடுத்து மீண்டும் செல்ல அவர்களுக்கு உதவும் போது அந்த சிறிய உதவிகூட அவர்களுக்கு பெரிதாக இருக்கும்.

தையல் தொழிலில் எனது Grandfatherடம் கூலி கொடுக்க வருபவர், எங்கள் வறுமைநிலையை அறிந்து, ஒருசிலர், கொடுக்க வேண்டிய பணத்தைவிட அதிகமாகக் கொடுத்து செல்வதைப் பார்த்திருக்கிறேன்.

இப்படி பலவிதமான நற்கிரியைகளை. . .செய்தவர்களையும் பல அனுபவங்களையும் சிறியவயதில் கவனித்ததுபோலவே. . . . பலர் எதிர்விதமாக செயல்படுவதையும் கண்டிருக்கிறேன். இதுதான் உலகம்.

வறியவர்க்கு கொடுப்பதே ஈகை என்று சொல்வார்கள்.

*ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு என்றும் சொல்வார்கள்.*

காலத்தோடு செய்த உதவியின் மதிப்பு உலகத்தைவிட பெரிது என்பார்கள்.

*பாத்திரமறிந்து பிச்சை கொடு என்றும் சொல்வார்கள்.*

தர்மம் தலைகாக்கும் என்று சொல்வார்கள்.

*தனக்கு மிஞ்சிதான் தானந்தருமம் என்றும் சொல்வார்கள்.*

**இந்த உலக வாழ்க்கையிலே நமக்கு எப்பொழுது மிஞ்சுவது . . . ? எப்பொழுது தர்மம் செய்வது? கடலிலே அலை ஓய்வது எப்பொழுது. . .தலை முழுகுவது எப்பொழுது?. . ..**

வீட்டிலே ஓய்வாக அமர்ந்திருக்கும்போது சிந்தித்துப் பாருங்கள்.. . . . .

**ஓய்வுகிடைப்பது எப்பொழுது? சிந்திப்பது எப்பொழுது? சிந்தித்துப் பாருங்கள்!!!**

**தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் செய்ய வேண்டிய காரியம் .. . .**

சேர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்வதும் கிறிஸ்துவின் மகிமையைத் தேடுவதும் ஆகும். இதற்கு கிடைக்கும் பலன். . . .நித்தியஜீவன். .

இதைத்தான் நாம் வாசித்த வசனத்தின்முலமாக அறிகிறோம்.

நாம் செய்யும் ஒவ்வொரு நற்கிரியைகளுக்கூடாக கர்த்தரின் நாமம் மகிமைப்படவேண்டும்.
இதுதான் உலகத்தார் செய்யும் நற்கிரியைகளுக்கும் நாம் செய்யும் நற்கிரியைகளுக்கும் வித்தியாசம். . .

இங்கிலாந்து நாட்டில் Princess Diana செய்ததும் நற்கிரியைகள்தான்.

இந்திய நாட்டிலே Mother Teresa செய்ததும் நற்கிரியைகள்தான்.

ஆனால் இரண்டுக்கும் வித்தியாசம் உள்ளன. சிந்தித்துப் பாருங்கள்.

4 வசனங்களை வாசிப்போம்.:

எபேசியர்/Ephesians 2:10 (நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம். . .)

மத்தேயு/Matthew 5:16 (மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு,. . )

1 பேதுரு/1 Peter 2:12 (அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு,. . .)

யாக்கோபு/James 4:17 (ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும்,. . .)

*(இந்த 4 வசனங்களையும் வைத்து ரோமர் 2: 7வது வசனத்தை தியானித்து பாருங்கள்)*

ரோமர்/Romans 2:7 (பக்கம் 209)

சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச்செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்.

*இப்படியாக கிறிஸ்தவர்கள் இருக்கவேண்டுமென்றும், நீங்கள் சந்திக்கும் கிறிஸ்தவர்கள் அப்படி இல்லையென்றால் அவர்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். . .*

*உங்களால் மாற்றமுடியாமல் இருக்கும் அவர்களை, ஜெபத்தின்மூலமாக தேவன் மாற்றுவார்..*

நமது தேவைகள் கிறிஸ்துவின் மகிமைக்காக இருக்குமானால்..

நமது தேவைகளை நமது தேவன் கிறிஸ்துவுக்குள் மகிமையிலே நிறைவேற்றுவார். . .. .

தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே.. .. என்று வேதம் சொல்கிறது.

நல்லவர் ஒருவரும் இல்லையென்றாலும்,

நல்ல காரியங்களை சோர்ந்துபோகாமல் செய்கிறவர்கள் பலர் இருக்கிறார்கள்.

நல்ல காரியங்களை செய்து தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்த பலர் வேண்டும்.

**நம்மை,** Good people **என்று சொல்லாமல்,** God people **என்று சொல்லலாம்.**

*But* God people, should do Good things to glorify God.

ரோமர்/Romans 2:7 (பக்கம் 209)

சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச்செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்.

**சதாகாலங்களிலும் உயிரோடு இருக்கிற நமது தேவன் நம்மை ஆட்கொண்டு ஆசீர்வதிப்பாராக.**

நற்கிரியைகளை மட்டும் செய்கிறவர்கள் நித்தியஜீவனை அடையமுடியாது.

அவைகளினாலே தேவனுடைய நாமம் மகிமைப்படுமானால், அவருடைய கிருபையினாலே நித்தியஜீவனை அடையலாம்.

**நித்தியஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம்.**

கிறிஸ்தவர்கள் நித்தியஜீவனைப்பெற்றுக் கொள்ளும் வண்ணம் வாழ வேண்டும் எனவும்,
நமது நற்கிரியைகளைப் பார்த்து மற்றவர்கள் கிறிஸ்துவை வேதத்தின்படி அறிந்து கொள்ளவும்
நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்ளவும் நம்மை தேவன் பயப்படுத்த,
அனைவரும் எழுந்து நின்று நம் தேவனிடம் மன்றாடுவோம்.
நமது வேண்டுதல்களை தேவன் கிறிஸ்துவுக்குள் மகிமையிலே நிறைவேற்றுவார். . .. .

*சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும்,*
*கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி,*
*பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று.*

## Let us Pray